**செ.வெ.எண்: 25** **நாள்:09 .11.2017**

**பத்திரிக்கைச் செய்தி.**

கரூர் மாவட்டத்தில் கேபிள் டிவி ஒளிபரப்பானது டிஜிட்டல் மயமாக்கப்பட்டு கரூர் கோட்டத்தில் நாளது தேதி வரை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மூலம் 24,260 செட்டாப் பாக்ஸ்கள் வழங்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. குளித்தலை கோட்டத்திற்கு விரைவில் டிஜிட்டல் சிக்னல் வழங்க நடடிவக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசு கேபிள் டிவி நிறுவனம் செட்டாப் பாக்ஸ் விநியோகத்தை வேகப்படுத்தியுள்ளது.

உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் விலையில்லா செட்டாப் பாக்ஸ்களை சந்தாதாரர்களின் இடத்தில் நிறுவி செயலாக்கம் செய்வதற்காக (Installation and one time activation Fee) ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரு முறை மட்டும் பெற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சந்தாதாரர்கள் செட்டாப் பாக்ஸ் பெற செயலாக்க தொகை ரூ.200/- தவிர கூடுதலாக தொகை ஏதும் செலுத்த தேவையில்லை. மாத சந்தா தொகையை (200க்கு மேற்பட்ட சேனல்களுக்கு ரூ.125+18% சேவை வரியுடன் ரூ.147.5/- மற்றும் 300க்குமேற்பட்ட சேனல்களுக்கு ரூ.175+18% சேவை பரியுடன் ரூ.207.50/-)பிரதி மாதம் 10ம் தேதிக்குள் செலுத்தினால் போதுமானது. மேலும் மாத சந்தா தொகையினை முன்னதாக (Advance Monthly Subscribtion) வழங்கத் தேவையில்லை.

கரூர் மாவட்டத்தில் ஒரு சில உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் உரிமம் பெற்றுக்கொண்டு அரசு கேபிள் டிவி இணைப்பை துண்டித்தும், தனியார் நிறுவனத்திற்கு சாதகமாகவும், பொது மக்களை அச்சுறுத்தியும் கட்டாயப்படுத்தியும், தனியார் செட்பாக் பாக்ஸ் வாங்க வற்புறுத்துவதாகவும், அரசு செட்டாப் பாக்ஸ் வழங்குவதற்கு கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இவ்வாறு யாரேனும் செயல்பட்டால் அவர்களின் உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், கடுமையான குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான புகாரை பொது மக்கள் 1800 425 2911, 04324 232090 மற்றும் 9498002576 ஆகிய தொலை/அலைப்பேசிகளின் மூலமாகவும் அல்லது எழுத்துப் பூர்வமாகவும் தெரிவிக்கலாம்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**